3rd November 1966]

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 650.

(இ) மத்திய அச்சகம், சென்னை—71.

அரசாங்க வட்டார அச்சகம், சேலம்—1.

அரசாங்க வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி—2.

(உ) ஆம். அச்சுத் தொழிலியல் டிப்ளோமா (L.P.T. Diploma) கூடுதல் தொழில் நுட்பத்தகுதியாக நிச்சயிக்கப்பட்டுள்ள பற்பல தொழில் நுட்ப வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அச்சுத் தொழிலியல் டிப்ளோமா பெற்றவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி டிப்ளோமோ பெறுதவர்கள் அரசாங்க அச்சகத்தில் எவ்வளவு பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்? இவர்களுடைய விகிதாசாரம் என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : விகிதாசாரக் கணக்கு இல்லை. டிப்ளோமா பெற்றவர்கள் 650 பேர். 1963-66 வரை அரசாங்க அச்சகத்தில் மனுப் போட்டவர்களின் எண்ணிக்கை 80. அவர்களிலே 70 பேர்களுக்குமேல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வை சங்கரன் : அச்சுத் தொழிலில் பயிற்சி கொடுத்து டிப்ளோமா கொடுப்பது என்பது பொதுவாக இல்லாத ஒன்று அரசாங்கம் அதை எடுத்து பயிற்சி கொடுத்திருக்கும் நிலையில் 650 பேர்களில் 70 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது. அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்து அரசாங்க அச்சகத்தில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு முதற் சலுகை அளிக்கப்படுகிறது என்று முதல் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போதே கூறியிருக்கிறேன்.

திருவள்ளுவர் சிலை

***380 கேள்வி.—திரு. கோ. சி. மணி :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் 2—5—1966-ல் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழா அரசாங்க செய்தி இலாகாவினரால் திரைப்படமாக (செய்திக்கதிர்) எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அத்திரைப்படம் திரையிடப்பட்டுள்ளதா?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை. மத்திய அரசாங்க செய்திப்படத்துறையினர் திரைப்படம் எடுத்தார்கள்.

(இ) அந்தத் திரைப்படம் 5—8—1966-ல் திரையிடப்பட்டுள்ளது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.